

பாமாலை 232 - சொற்பக் காலம் பிரிந்தாலும்

1. சொற்பக் காலம் பிரிந்தாலும் பார்
பின்பு ஏகசபையாக
கூடுவோம் ஆனந்தமாக;
அது மட்டும் கர்த்தர் தாங்குவார்.

2. அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்
மிக்க ஞானத்தால் நடத்தி
மோசமின்றியும் காப்பாற்றி
அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்

3. அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்
சிறகாலே மூடிக் காத்து
மன்னா தந்து போஷிப்பித்து
அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்

4. அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்
துன்பம் துக்கம் நேரிட்டாலே
கையில் ஏந்தி அன்பினாலே
அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்

5. அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்
ஜெயக் கொடி பறந்தாடும்
சாவும் தோற்றுப் பறந்தோடும்
அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்.